<u>நீதித்துறை நடுவர் கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்</u>

<u>முன்னிலை</u> :- திருமதி.பி.எம்.ரைஹானா பர்வீன், பி.எஸ்.சி,பி.எல்,
நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்

2019-ம் ஆண்டு ஜூன் திங்கள் 14 -ம் நாள் வெள்ளிக்கிழமை,
*(திருவள்ளுவராண்டு, 2050, ஸ்ரீ ஹே விளம்பி வருடம், வைகாசி
திங்கள் 31-ம் நாள் வெள்ளிகிழமை )*

<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண்.**14/2016**</u>

<u>அரசுக்காக**:-**</u>

காவல் உதவி ஆய்வாளர்,
அனைத்து மகளீர் காவல் நிலையம்,கிழக்கு
(காவல் நிலைய குற்ற எண். 2/2016).

... புகார்தாரர்

/எதிர்/

1. ரங்கநாதன்,(34) த.பெ. பொன்னுமுத்து

2.ராம்குமார் த.பெ. பொன்னுமுத்து

3. ராஜ்குமார் த.பெ. பொன்னுமுத்து

4. ரகு த.பெ. பொன்னுமுத்து

5. ராதகிருஷ்ணன் த.பெ. பொன்னுமுத்து ... எதிரிகள்

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 30.03.2016 ம் தேதி இந்நீதிமன்றக் வழக்குக்கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இறுதியாக 07.06.2019-ம் தேதி இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-1 (கூடுதல் பொறுப்பு)அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. டி. கணேஷன், பி.ஏ,பி.எல்., அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களும் கேட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்த பின்பு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை **:-**</u>

1 ம் எதிரி ரங்கநாதனுக்கும் வாதி அஜிதாவிற்கும் கடந்த 1.12.2014 ம் தேதியில் திருமணம் நடைபெற்றுள்ளதாகவும் திருமணத்தின் போது வாதிக்கு 20 பவுன் நகையும், 1 வது எதிரிக்கு 8 ¼ பவுன் நகையும் 2 லட்சம் பொருமானமுள்ள வீட்டு உபயோகப்

பொருட்களும் வரதட்சணையாக கொடுத்துள்ளதாகவும் திருமணத்திற்கு பின்னிட்டு வாதியும் 1 வது எதிரியும் கோவையில் குடியிருந்து வந்த போது 2 முதல் 5 வரையுள்ள எதிரிகளின் பேச்சைக் கேட்டுக் கொண்டு, வாதி அணிந்திருந்த நகைகளை கேட்டு பிரச்சனை செய்தும், வாதி கொடுக்காததால் வாதியை அடித்தும், வீட்டுச் செலவிற்கு பணம் கொடுக்காமலும் இருந்து வந்துள்ளதாகவும் பின்னிட்டு வாதி அவர்களின் பெற்றோர் மூலம் குடும்ப செலவிற்கு பணம் பெற்று செலவு செய்து வந்துள்ளார் என்றும் கடந்த மார்ச் மாதம் 2015 ல் 3 வது எதிரி ராஜ்குமார் வேஷ்டியை தூக்கி காண்பித்து அசிங்கமாவும் அருவருப்பாகவும் நடந்து கொண்டுள்ளதாகவும் இது குறித்து வாதி அவர்களது பெற்றோர்களிடம் சொல்லி அவர்களது பெற்றோர்கள் வந்து பஞ்சாயத்து செய்த போது 1 முதல் 4 வரையிலான எதிரிகள் வாதியை அவமானப்படும் படி பேசியும் வாதியையும் அவர்களது பெற்றோருடன் வீட்டை விட்டு துரத்தியுள்ளனர் என்றும் இது குறித்து வாதி மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து மனு எண். 234/2015 வழங்கி விசாரணை செய்தும், சமாதானம் செய்யப்பட்டுள்ளது பின்னட்டு எதிரிகள் மேற்படி சமாதானப்படி செயல்படாததால், வாதி அவரது பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் மூலம் 19.12.2015 ம் தேதி எதிரிகளின் வீட்டிற்கு சென்று எதிரிகளிடம் நியாயம் கேட்ட போது, 1 முதல் 5 வரையிலுள்ள எதிரிகள் வாதியை டைவர்ஸ் பேப்பரில் கையெழுத்து செய்து விட்டு போ, உன் சாவு எங்கள் கையில் தான் என்று மிரட்டியுள்ளனர் என்றும் இது குறித்து வாதி கோவை அனைத்து மகளிர் காவல் நிலையம் கிழக்கில் மனு எண். 684/15 வழங்கி பஞ்சாயத்து பேசி 1 வது எதரி 2 முதல் 4 வரையிலுள்ள எதிரிகள் பேச்சைக் கேட்டுக் கொண்டு வாதியுடன் சேர்ந்து வாழாமல், வாதிக்கு மன உளைச்சலையும், கொடுமையும் ஏற்படுத்தியுள்ளதாக 1 முதல் 5 வரையிலான எதிரிகள் மீது இதச பிரிவு- 498(A), 406, 506(1) மற்றும் 354(A) இதச -ன் கீழ் அனைத்து மகளிர் கிழக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச.207 பிரிவின்படி வழக்கின் ஆவணங்கள், நகல்கள் வழங்கப்பட்டது. இவ்வழக்கின் எதிரிகள் குற்றங்கள் புரிந்திருப்பார்கள் என அனுமானிப்பதற்கு முகாந்திரம் இருந்ததால், 1 ம் எதிரி மீது 498(A), 406, 506(1) இ.த.ச. பிரிவுகளின் கீழும், 2 மற்றும் 4 எதிரிகள் மீது 498(A) உ/இ 109, 406, 506(1) இ.த.ச. பிரிவுகளின் கீழும், 3 ம் எதிரி மீது இ.த.ச. சட்டப்பிரிவுகள் 498(A) உ/இ 109, 406, 506(1) மற்றும்

354(A)-ன் கீழும், 5ம் எதிரி மீது இ.த.ச. சட்டப்பிரிவுகள் 498(A) உ/இ 109, 506(1) வின் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தினால், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. அரசுத்தரப்பில் எதிரிகள் மீதானக் குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் பொருட்டு பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரை பட்டியலிடப்பட்டு அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 2 சான்றாவணங்கள், குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்தும், சான்றாவணத்திலிருந்தும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:

அ**.**சா**.1** அஜிதா தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளான தனது கணவர் ரங்கநாதன் மற்றும் தனது கணவரது சகோதர்களான ராம் குமார், ராஜ் குமார், ரகு, ராதாகிருஷ்ணன் ஆகியோர்களது மீது நடவடிக்கை எடுக்க கோரி தான் புளியகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்ததாகவும் தற்போது எதிரிகளுடன் சமதானமாக போய்விட்டேன் அதற்கான மனுவை 09.10.2018 அன்று தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் ஆஜர் எதிரிகளின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்வதாகவும் தான் கொடுத்த புகார் **அதசாஆ.1** . என்றும் சாட்சியம் அளித்துள்ளார்**.**

**அ.சா.2 திருமதி.யோகாம்பாள்,** காவல் ஆய்வாளர், தற்சமயம் தான் கோவை மாநகர் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றும் தான் கடந்த 21.12.2015ம் தேதி கோவை அனைத்து மகளிர் காவல் நிலைய கிழக்கில் அலுவலில் இருந்த போது ஆர். அஜிதா த.பெ. ராஜேந்திரன் கீழாக்கல் குறிச்சி அம்மன் கோயில் தெரு, சங்கமம் எதிர்புறம், தற்கலை, கண்ணியகுமாரி மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்தமூலமான **அதசாஆ.1** புகாரை பெற்று அனைத்து மகளிர் காவல் நிலைய கு.எண். 21/15 ச.பி. 498(அ), 406, 506(1) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும் **அதசாஆ.2** முதல் தகவல் அறிக்கையினையும் அசலையும் வாதியின் புகாரையும் இணைத்து கோவை கூடுதல் மகிளா நீதிமன்றத்திற்கு அனுப்பி

வைத்ததாகவும் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு சாட்சிகள் அஜிதா த.பெ. ராஜேந்திரன், செல்லதங்கம் த.பெ. ராஜேந்திரன், ராஜேந்திரன் த.பெ. அய்யனார் குட்டி, மகேஷ் த.பெ. ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் அன்றே இவ்வழக்கில் எதிரியை தேடி எதிரி 1.ரங்கநாதன் த.பெ. பொன்னுமுத்து, 13/3 டி தீபம் நகர் இருகூர் என்பவரை இருகூர் பஸ் நிலையத்தில் வைத்து விசாரணை செய்து கைது செய்ததாகவும் எதிரியை நிலையம் கொண்டு வந்து எதிரியை மருத்துவ பரிசோதனை மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் இவ்வழக்கில் 23.12.2015 ம் தேதி சாட்சிகள் ராஜேந்திரன் பிரசாத்(42) த.பெ. கிருஷ்ணன், சாட்சி தேவராஜ் த.பெ. கபீர் ராஸ், சாட்சி, மமேஷ் த.பெ. ராஜேந்திரன், சாட்சி செல்லம் த.பெ. பென்னையன் என்பவரை விசாரணை செய்து வாக்கு மூலம் பதிவு செய்ததாகவும் இவ்வழக்கில் தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளருக்கு அனுப்பி வைத்ததாகவும் ஆய்வாளர் தொடர் விசாரணை மேற்கொண்டு மார்தண்டா காவல் நிலைய ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும் விாரணை முடித்து 08.1.20156 அன்று எதிரிகள் 1 முதல் 5 மீது 498(அ), 109, 406, 506(1) இதச மற்றும் 354 (அ) இதச வின் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் ஆய்வாளர் பிரியமாலினியுடன் பணிபுரிந்த வகையில் அவரது கையெழுத்து தனக்கு நன்கு பரிச்சையம் அவர் தயாரித்த கோப்புகள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சியம் அ.சா.2 உடன் முடித்துக்கொள்ளப்பட்டு மற்ற சாட்சிகள் விலக்கப்பட்டு, அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில், எதிரிகளுக்குப் பாதகமான பகுதிகள் குறித்து கு.வி.மு.ச.313(1)(ஆ) பிரிவின்படி வினவியபோது, எதிரிகள் அவற்றை பொய் என்றும், இவ்வழக்கு பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

6. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:</u>

தற்போது தீர்வுக்குரிய பிரச்சனை அரசு தரப்பில் 1 ம் எதிரி மீது 498(A), 406, 506(1) இ.த.ச. பிரிவுகளின் கீழும், 2 மற்றும் 4 எதிரிகள் மீது 498(A) உ/இ 109, 406, 506(1) இ.த.ச. பிரிவுகளின் கீழும், 3 ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 498(A) உ/இ 109, 406, 506(1) மற்றும் 354(A) இதச -ன் கீழும், 5 ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 498(A) உ/இ 109, 506(1) இ.த.ச. வின் கீழும் சுமத்தப்பட்டுள்ளக் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>தீர்வு:</u>

7. இவ்வழக்கில் புகார்தாரரும், சாட்சியுமான அ.சா.1 அஜிதா, புலன் விசாரணை அதிகாரி அ.சா.2 திருமதி. யோகாம்பாள், காவல் ஆய்வாளர் ஆகியோர் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

8. கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 ன் சாட்சியத்தின் வாயிலாக அ.சா.1 ம் எதிரிகளும் சமாதானமாக சென்று அரசு தரப்பு வழக்கினை மறுத்து சாட்சியம் அளித்துள்ளார் என்றும் அ.சா.2 ன் சாட்சியம் மற்றும் அ.த.சா.ஆ.1 மற்றும் அ.த.சா.ஆ.2 சான்றாவங்கள் வாயிலாக எதிரிகள் மீதானக் குற்றச்சாட்டுகளைச் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதாக வாதிட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞரும் தனது தரப்பில் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும் எதிரிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. இரு தரப்பு வாதங்களும் கேட்கட்பட்டன. ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

10. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1 அஜிதா தனது சாட்சியத்தில் தான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் தன் பெற்றோருடன் **10** மாதங்களாக வசித்து வருவதாகவும் ஆஜர் **1** ம் எதிரி தன் கணவர் என்றும் ஆஜர் எதிரிகளான தனது கணவர் ரங்கநாதன் மற்றும் தனது கணவரது சகோதர்களான ராம் குமார், ராஜ் குமார், ரகு, ராதாகிருஷ்ணன் ஆகியோர்களது மீது நடவடிக்கை எடுக்க கோரி தான் புளியகுளம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்ததாகவும் தற்போது எதிரிகளுடன் சமதானமாக போய்விட்டேன் அதற்கான மனுவை 09.10.2018 அன்று தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் ஆஜர் எதிரிகளின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்வதாகவும் தான் கொடுத்த புகார் **அதசாஆ.1** . என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. இந்நிலையில் அ.சா.1 அஜிதாவும் எதிரிகளும் தங்களுக்குள் சமாதானமாக சென்றுவிட்டதாகவும் வழக்கை மேற்கொண்டு நடத்த விருப்பம் இல்லை என்றும் கூறி

கு.வி.மு.சா பிரிவு 320ன் கீழ் மனு ஒன்றை தாக்கல் செய்தார்கள். அந்த மனு சி.எம்.பி. 1059/2018 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு இதச பிரிவு 498(அ) ஆன குற்றச்சாட்டு சமரசமாக செல்ல அனுமதிக்க இயலாத குற்றம் என்பதால் அந்த மனு 29.05.2019 அன்று தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது.

12. மேலும் அ.சா.1 அஜிதா புகார் மனுவிலும் விசாரணை வாக்குமூலத்திலும் சொன்ன விவரங்களுக்கு முரணாக எதிரிகளின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 விசாரணை அதிகாரி மட்டுமே எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ஆன புகார்தாரர் எதிரிகளுடன் சமரசமாக சென்று அரசுத்தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் அரசுத்தரப்பிலும் வேறு தனிநபர் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இவ்வாறான வழக்கின் சூழ்நிலையில் உண்மையில் குற்றறிக்கையில் கண்டவாறு சம்பவம் நடைபெற்றதா? அல்லது சாட்சிகள் தங்களுக்குள் சமாதானமாக சென்றதால் அ.சா.1 அஜிதா முதல் விசாரணையை மறுத்து கூறினாரா? என்ற வகையில் சந்தேகதை ஏற்படுத்துகிறது.

13. அ.சா.1 அஜிதா மற்றும் அவரது குடும்பத்தினர் எதிரிகளுடன் சமதானமாகி விட்டதால் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவு அளிக்காமல் சாட்சியம் அளித்துவிட்டதாக எடுத்துக்கொண்டாலும், அவரை தவிர தனி நபர் சாட்சிகள் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை. எனவே அ.சா.2 திருமதி. யோகாம்பாள், விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளை குற்றவாளிகள் என கருத முடியாது என இந்நீதிமன்றம் கருதுகின்றது. அ.சா.1 ம் 3 வது எதிரி ராஜ்குமார் வேஷ்டியை தூக்கி காண்பித்து அசிங்கமாவும் அருவருப்பாகவும் நடந்து கொண்டதாகவும், 1 வது எதரி 2 முதல் 5 வரையிலுள்ள எதிரிகள் பேச்சைக் கேட்டுக் கொண்டு வாதியுடன் சேர்ந்து வாழாமல், வாதிக்கு மன உளைச்சலையும், கொடுமையும் ஏற்படுத்தி கொலை மிரட்டல் செய்ததாக குறிப்பாக சாட்சியம் அளிக்கவில்லை. அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்ட சாட்சியங்களும் எதிரிகளை குற்றச்சாட்டுகளுடன் சந்தேகத்திற்கு இடமின்றி இணைக்கும் வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

14. எனவே அரசுத்தரப்பு வழக்கில் ஏற்பட்ட சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக வழங்கி அவர்களை குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

15. முடிவில், 1 ம் எதிரி 498(A), 406, 506(1) இ.த.ச. பிரிவுகளின் கீழும், 2 மற்றும் 4 எதிரிகள் 498(A) உ/இ 109, 406, 506(1) இ.த.ச. பிரிவுகளின் கீழும், 3 ம் எதிரி சட்டப்பிரிவுகள் 498(A) உ/இ 109, 406, 506(1) மற்றும் 354(A) இதச -ன் கீழும், 5 ம் எதிரி சட்டப்பிரிவுகள் 498(A) உ/இ 109, 506(1) இ.த.ச. வின் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, அவர்களை விடுதலை செய்து கு.வி.மு.சா பிரிவு 248(1)ன் படி தீர்ப்பளிக்கப்படுகின்றது.

16. வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை அதனால் வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2019-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14-ம் நாள் வெள்ளிக்கிழமை ,அன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்) திருமதி. பி.எம். ரைஹனா பர்வீன்
நீதித்துறை நடுவர்
கூடுதல் மகளிர் நீதிமன்றம்
கோயமுத்தூர்

அட்டவணை:-

அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:-

அ.சா.1 :- திருமதி. அஜிதா

அ.சா.2 :- திருமதி. யோகாம்பாள், காவல் ஆய்வாளர்

அரசுத் தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-

அ.த.சா.ஆ 1 :- புகார்

அ.த.சா.ஆ 2 :- முதல் தகவல் அறிக்கை

<u>அரசுத் தரப்பில் குறியிடப்பட்டுள்ள சான்று பொருள்</u>: இல்லை

<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணம்</u>: இல்லை

(ஒம்) திருமதி. பி.எம். ரைஹனா பர்வீன்
நீதித்துறை நடுவர்
கூடுதல் மகளிர் நீதிமன்றம்
கோயமுத்தூர்

<u>பின்சேர்க்கை</u>:-

1.வழக்கின் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

2.வழக்கின் காலத்தில் சாட்சிகள் 3 நாட்களுக்கு மேல் விசாரணை இன்றி நிறுத்தி வைக்கப்படவில்லை.

3.வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

4.முடிவில் எதிரிகளை கு.வி.மு.ச.248(1) பிரிவின் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டது.

5.வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை அதனால் வழக்குச் சொத்துப் பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

(ஒம்) திருமதி. பி.எம். ரைஹனா பர்வீன்
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயமுத்தூர்.

/உண்மை நகல்/

நகல்:-
மாண்புமிகு தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு
பணிந்து சமர்பிக்கப்படுகிறது.